Dhinamalar July 6th 2010.

# 'தசை சிதைவு' நோயை கண்டறிய சிறப்பு மையம்

## அவினாசிலிங்கம் பல்கலையில் துவக்கம்

**கோவை, ஜூலை 6-**

''தசை சிதைவு நோய் பற்றிய ஆராய்ச்சிகளை அதிகரித்து, தேசிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது முக்கியம்,'' என்று இந்திய மருத்துவக் கவுன்சில் டைரக்டர் ஜெனரல் விஷ்வ மோகன் கூறினார்.

சிறுவர், சிறுமியரை தாக்கும் 'தசை சிதைவு' எனும் அபூர்வ நோய் பற்றி பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்க, கோவை அவினாசிலிங்கம் மகளிர் பல்கலையில், எம்.டி.சி.ஆர்.சி. எனும் புதிய ஆராய்ச்சி மையம் துவக்கப்பட்டுள்ளது. நேற்று இம்மையத்தை இந்திய மருத்துவக் கவுன்சில் டைரக்டர் ஜெனரல் விஷ்வ மோகன் கட்டோக் துவக்கி வைத்தார்.

அவர் பேசுகையில், ''தசை சிதைவு நோய்(மஸ்குலர் டிஸ்ட்ரோபி) குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த துவக்கப்பட்டுள்ள இந்த ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி மையம், ஒரு மாபெரும் இயக்கமாக மாற வேண்டும். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் முழு விபரம் அடங்கிய தகவல்களை தேசிய அளவில் பதிவு செய்து ஆராய்ச்சியை மேம்படுத்த வேண்டும்.

''இதன் மூலம் நோயின் அறிகுறிகளை பொதுமக்களுக்கு விளக்கி ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தேசிய, சர்வதேச அளவில் நோய் குறித்த விழிப்புணர்வை பரப்ப வேண்டும்,'' என்றார்.

தமிழக சுகாதாரத்துறை சிறப்பு செயலர் விஜயகுமார் பேசுகையில், ''தசை சிதைவு நோய் பற்றி பொதுமக்களில் பலர் இன்னும் அறியாமல் உள்ளனர். இந்நோய்க்கான ஆராய்ச்சி மையம் துவக்கியுள்ள அவினாசிலிங்கம் பல்கலை, ஆராய்ச்சியின் பலன்களை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்.

''இந்நோய் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் சர்வதேச அளவில் சென்றடையும் வகையில் ஆராய்ச்சியை முடுக்கி விட வேண்டும்.

''உள்ளூர் மொழிகளில் இதற்கான வெப்சைட் ஏற்படுத்த வேண்டும். இந்நோய் பற்றி அரசு சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் மையங்கள் இல்லை என்பதால், இந்த மையத்தை அரசு அங்கீகரிக்கிறது. அரசின் தனியார்-பொதுத்துறை பங்களிப்பாக இம்மையத்தை எடுத்துக் கொள்ளலாம்,'' என்றார்.

அவினாசிலிங்கம் பல்கலை வேந்தர் சண்முகானந்தம் பேசுகையில், ''புதிதாக துவக்கப்பட்டுள்ள இந்த திட்டம், மனித சமுதாயத்தின் நன்மைக்கானது. தக்க நேரத்தில் துவக்கப்பட்டுள்ள இதன் வசதிகளை பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தனியார், அரசு மருத்துவமனைகளுடன் பல்கலை வைத்துள்ள நல்ல உறவு, இத்திட்டம் சிறப்பாக செயல்பட உதவும்,'' என்றார்.

புதிய மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் லஷ்மி கூறுகையில், ''மரபணு கோளாறு காரணமாக ஏற்படும் இந்நோயின் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து விட்டால், சிகிச்சை மூலம் வாழ்நாளை நீட்டிக்க முடியும். தமிழகத்தில் இதுவரை 1,200 குழந்தைகளுக்கு இந்நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நோயின் அறிகுறிகளை அடையாளம் கண்டு, நோயை உறுதிபடுத்துவது, நோயாளி மற்றும் பெற்றோருக்கு ஆலோசனை வழங்குவது ஆகிய பணிகளை இம்மையம் மேற்கொள்ளும்.

காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை மையம் செயல்படும். நோய்க்கான அறிகுறிகள் தென்படும் குழந்தைகளின் பெற்றோர், மருத்துவ ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இம்மையத்தை அணுகலாம். www.mdcrcindia.org எனும் வெப்சைட்டில் இதற்கான தகவல்கள் கிடைக்கும். நோயால் தாக்கப்பட்ட குழந்தைகளை தனிமைப்படுத்தாமல் அவ்வப்போது வெளியில் அழைத்துச் சென்று மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்வது அவர்களின் ஆயுளை நீட்டிக்க உதவும்,'' என்றார்.

**அறிகுறி என்ன?:** 'மஸ்குலர் டிஸ்ட்ரோபி' எனப்படும் இந்த அபூர்வ நோயால் பாதிக்கப்பட்ட 12 வயது மாணவனின் தந்தை சந்திரசேகர் என்பவர் கூறுகையில், ''அதிக நாட்கள் நீடிக்கும் காய்ச்சல்தான் இதன் முதல் அறிகுறி. நன்கு ஓடியாடி விளையாடும் குழந்தை திடீர் திடீரென கீழே விழும்; கால் தொடைகளின் முன்பகுதி சூம்பி காணப்படும். தரையில் அமர்ந்து எழும் போது கைகள் இரண்டையும் ஊன்றி எழும்.

''மரபணு சோதனை மூலம் மட்டுமே நோயை அடையாளம் காண முடியும். இந்நோய்க்கான ஆராய்ச்சி, வழிகாட்டல் மையம் கோவையில் துவக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது,'' என்றார்.

பல்கலை துணைவேந்தர் (பொ) சாந்தா, முன்னாள் துணை வேந்தர் சரோஜா, ஆலோசகர் டாக்டர் திலோத்தம்மாள், அறிவியல் துறை டீன் பர்வதம் உட்பட பெற்றோர், டாக்டர்கள், மாணவியர் பலர் பங்கேற்றனர்.